1975 நவம்பர் 11]

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, சமீபத்தில் விஷ மதுவினால் 40 பேர் இறந்தும், பலபேர் பாதிக்கப்பட்டும் இருந்தார்கள், அதை இந்த மாநிலத்திற்குள் கொண்டு வருவதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீதும், மற்றவர்கள் மீதும் சர்க்கார் நடவடிக்கை எடுத்ததா? அவர்கள் பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, குறிப்பாக எந்த அதிகாரிகள் உடந்தையாக இருந்தார்கள் என்ற தகவல் இல்லை. இந்தச் சம்பவம் குறித்து பொதுவாக ஒரு வழக்கு நடைபெற்றது.

Shooting incident at Madurai

*277 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether there was any shooting incident in Police Station at Madurai about the 4th January 1975; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) 3—1—1975 அன்று துப்பாக்கியால் சுடப்பட்ட நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. 4—1—1975 அன்று அல்ல.

(இ) மெய்க்காவல் பணியிலிருந்த சேமக்காவல் படைப் பிரிவின் நாயக் ஒருவர் 3—1—1975 அன்று மதுரை B1 காவல் நிலையத்திற்கு வந்தாரென்றும் வாயிலில் முறைக் காவல் பணியிலிருந்த காவலரையும், காவல் துறை இன்ஸ்பெக்டரையும் நோக்கித் துப்பாக்கியால் சுட்டாரென்றும், அதன் பின்னர் தற்கொலை செய்து கொள்ள முயன்றார் என்றும் கூறப்பட்டுள்ளது. ஒழுங்கீனமாக நடந்து கொண்ட அந்த நாயக் மீது இன்ஸ்பெக்டர் இலாக்கா நடவடிக்கை எடுத்தாரென்ற காரணத்தால் அவரிடம் அந்த நாயக் பகை கொண்டார் என்று கூறப்படுகிறது. B1 மதுரை மத்திய காவல் நிலையத்தில் அந்த நாயக் மீது குற்ற வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு மதுரை செஷன்ஸ் நீதி மன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இம்மாதிரி ஒரு போலீஸ் அதிகாரியை, போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று, அங்கிருக்கக் கூடிய ஒரு போலீஸ் அதிகாரி பேரில் துப்பாக்கிப் பிரயோகம் செய்வது என்பது ரொம்பவும் ஆபத்தான விஷயம் அல்லவா. ஆகவே, இந்த மாதிரியான சம்பவங்கள் மதுரையில் மட்டும் அல்லாமல் மற்ற இடங்களிலும் நடக்காமல் இருப்பதற்கு அரசாங்கத்தில் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.? குறிப்பாக, ரிசர்வில் உள்ளவர்களுக்கும், லோகல் போலீசில் இருப்பவர்களுக்கும் நல்லுறவு உருவாவதற்கு ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதா, இனி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, 1974-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் சம்பந்தப்பட்ட நாயக் ஜகந்நாதன் என்பவர் கைதிகளை அழைத்துச் செல்கிற வேலையில் இருந்த போது அவர் குடிபோதையில் இருந்தார் என்றும், அப்போது ஒரு பெண்ணிடம் தகாத முறையில் நடந்தார் என்றும் ஒரு புகார் வந்தது, இந்தப் புகாரை மேற்கொண்டு விசாரித்து, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த நாயக் 2 மாதம் சஸ்பெண்ட் செய்யப்பட்டு, வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தார். இதனால் ஏற்பட்ட ஆத்திரம் காரணமாக அந்தக் காவல்துறை நாயக் அந்த அதிகாரி மீது சுட்டிருக்கிறார். இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறும் என்று அரசு எதிர்பார்த்து அதற்கு முன் நடவடிக்கை எடுக்க முடியாது. இது திடீரென்று நடந்து விட்ட, எதிர்பாராத நிகழ்ச்சி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Transfer of Officials

* 278 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken by the Government to enable the Government servants including Government School teachers, who are at distant places, to work in the same place as far as possible in case both are employed?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கணவன், மனைவி ஆகிய இருவருமே அரசுப் பணியில் இருப்பின், அவர்கள் அரசுப் பணியில் இன்றியமையாமைக்குப் பாதகமின்றி பொதுவாக ஒரே